# ஆதாமும் இயேசுவும்



## மனன வசனம்

**இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். ரோமர் 5:1,2.**

## ஆராய்ச்சிக்கு

**ரோமர் 5**

நவம்பர் 4 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தால்மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம்; அதாவது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இயேசுவின் நீதிமட்டுமே தேவனுக்குமுன் நம்மை நீதியுள்ளவர்களாக நிறுத்த முடியும். இது மாபெரும் சத்தியம். 'ஆபிரகாம்போன்ற நீதிமான்கூட கிரியைகளால் அல்ல, கிருபையினால்தான் இரட்சிப்பைப் பெறமுடிந்தது' என்று பவுல் சொல்கிறார்; பிறகு, மிகப்பெரிய ஒரு விஷயத்தைக் கூறுகிறார். அதாவது, பாவத்திற்கும் உபத்திரவத்திற்கும் மரணத்திற்கும் காரணத்தையும், கிறிஸ்து நமக்காகச் செய்த செயல் அதற்குத் தீர்வாக அமைந்ததையும் காட்டுகிறார்.

ஆதாம் என்கிற ஒரு மனிதனின் விழுகையால், மனித இனம் ஆக்கினைக்கும் புறம்பாகுதலுக்கும் மரணத்திற்கும் ஆளானது; இயேசு என்கிற ஒரு மனிதனின் வெற்றியால் உலகத்தார் அனைவருமே தேவனுக்கு முன்பாக ஒரு புதிய நிலையை அடைந்தார்கள். இயேசுவை விசுவாசிப்பதால் தங்கள் பாவப் பதிவுகளையும் அந்தப் பாவங்களுக்கான தண்டனையையும் இரத்துசெய்யலாம்; பாவ மன்னிப்பைப் பெறலாம்.

ஆதாமின் தவற்றால் உண்டானதைச் சரிசெய்ய இயேசு வந்ததாக பவுல் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். மேலும், ஆதாமின் பாவத்தால் குற்றவாளிகளானவர்கள் இயேசு எனும் இரட்சகரை விசுவாசிப்பதால் அதிலிருந்து தப்பலாமென்றும் காட்டுகிறார். இது எல்லாவற்றிற்கும் கிறிஸ்துவின் சிலுவையும் அவர் நமக்காக மரித்ததுமே அடிப்படையாக இருக்கிறது; யூதரானாலும் புறஜாதியாரானாலும் ஒவ்வொரு மனிதனும் இயேசுவால் இரட்சிக்கப்படுகிற வழியை இதுவே திறந்துள்ளது. தம்மை ஏற்றுக்கொள்கிற அனைவருக்கும் அவர் தம் இரத்தத்தால் நீதியைச் சம்பாதித்துத் தந்திருக்கிறார். நம் நம்பிக்கை அனைத்திற்கும் இது அடிப்படையாக இருப்பதால், இதுபற்றி ஆராய்வது பயன்மிக்கதாக இருக்கும்.

## விசுவாசத்தால் நீதிமானாகுதல்

***ரோமர் 5:1-5இல் பவுல் சொல்வதை சுருக்கமாக எழுதுங்கள். இதிலுள்ள பாடம் என்ன?***

'நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்' என்று நிறைவேற்றப்பட்ட ஒரு செயலாக இது சுட்டிக்காட்டப்படுகிறது. நியாயப்பிரமாணக் கிரியைகளால் அல்ல, இயேசு கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்டதால்மட்டுமே நாம் நீதிமான்களாக அறிவிக்கப்படுகிறோம், அல்லது எண்ணப்படுகிறோம். இயேசு இந்தப் பூமியில் பாவமே செய்யாதவராக வாழ்ந்ததும், நியாயப்பிரமாணத்தைப் பூரணமாக நிறைவேற்றியதும் நம்முடைய கணக்கில் எண்ணப்படுகிறது.

அதே நேரம், நம் பாவங்கள் எல்லாமே இயேசுவின்மேல் வைக்கப்பட்டன. நாம் அல்ல, இயேசுவே அந்தப் பாவங்களை எல்லாம் செய்ததாக எண்ணப்பட்டு, அதன்மூலம் நாம் அடையவேண்டிய தண்டனையிலிருந்து நம்மை விடுவித்தார். நாம் அந்தத் தண்டனையை அடையாமல், நமக்காக அதை கிறிஸ்து ஏற்றுக்கொண்டார். பாவிகளுக்கு இதைவிட மகிமையான செய்தி ஏதும் இருக்கமுடியுமா?

நீதிமான்களாக்கப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைத்திருப்பதால், உபத்திரவத்தில் அவர்கள் மேன்மைபாராட்ட முடியும். ரோமர் 5:2இலும் ரோமர் 5:3இலும் வருகிற 'மேன்மைபாராட்டுகிறோம்' என்கிற வார்த்தை இதைத்தான் வலியுறுத்துகிறது. தேவன் எல்லாவற்றையும் நன்மைக்காகவே செய்வார் என்கிற நம்பிக்கை இவர்களுக்கு இருக்கும். கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுவதை மேன்மையாக எண்ணுவார்கள். 1பேதுரு 4:13.

ரோமர் 5:3-5இல் படிப்படியாக விஷயங்கள் சொல்லப்படுகின்றன.

**1. பொறுமை:** பொறுமை என்பதற்கான கிரேக்கவார்த்தை **ஹுபோமொனே**; இதற்கு, 'உறுதியான சகிப்பு' என்று அர்த்தமாகும். சோதனையும், பாடுகளும் வாழ்க்கையை பாரமாக மாற்றலாம்; கிறிஸ்துவில் நமக்கு நம்பிக்கைகுறித்த சிந்தையும் விசுவாசமும் இருந்தால், உபத்திரவம் இப்படிப்பட்ட சகிப்புத்தன்மையை நமக்குள் உருவாக்கும்.

**2. பரீட்சை:** இதற்கான கிரேக்க வார்த்தை **டோகைம்**; இதற்கு 'அங்கீகரிக்கப்படும் தன்மை' என்று அர்த்தம்; எனவே இது 'குணத்தை' அல்லது 'அங்கீகரிக்கப்பட்ட குணத்தை' சுட்டிக்காட்டுகிறது. உபத்திரவங்களைப் பொறுமையோடு சகிக்கிறவர்களின் குணமானது அங்கீகரிக்கப்படுகிற குணமாக வளர்ச்சியடைகிறது.

**3. நம்பிக்கை:** சகிப்புத்தன்மையும் அங்கீகாரமும் இயல்பாகவே நம்பிக்கையை உண்டாக்குகிறது; இது இயேசுவின்மேலுள்ள நம்பிக்கை, அவருக்குள்ளான இரட்சிப்பின் வாக்குறுதிகுறித்த நம்பிக்கை. இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து, மனந்திரும்பி, கீழ்ப்படிதலோடு வாழ்கிறவரைக்கும் நம்முடைய நம்பிக்கை ஒழிந்துபோவதில்லை.

---

உங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும்விட நீங்கள் அதிக எதிர்பார்ப்போடு இருக்கிற விஷயம் என்ன? அந்த நம்பிக்கை எவ்வாறு இயேசுவில் நிறைவேறமுடியும்? நிறைவேறும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? இல்லையென்றால், அதைக்குறித்து நீங்கள் அதிக நம்பிக்கையோடு இருப்பதற்கு, நீங்கள் என்ன செய்யலாம்?

## நாம் பாவிகளாயிருக்கையில்

***தேவனுடைய குணம் பற்றி ரோமர் 5:6-8 வசனங்கள் என்ன சொல்லுகின்றன? இது எவ்வாறு நம்பிக்கை நிறைந்த ஒரு செய்தியாக இருக்கிறது?***

---

ஆதாம்-ஏவாள் தேவனுடைய நிபந்தனையை மீறினபோது, அவர்களை தம்மோடு ஒப்புரவாக்க தேவன்தாம் முதல்அடி எடுத்துவைத்தார். அதுமுதல், இரட்சிப்பிற்கு ஒரு வழியை உண்டாக்கவும், ஆண்களும் பெண்களும் அதை ஏற்றுக்கொள்ளவும் தேவனே முதல் முயற்சியில் இறங்கிவந்துள்ளார். ‘காலம் நிறைவேறினபோது, தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.’ கலா 4:5.

***இயேசுவின்மூலம் தேவனுடைய கோபாக்கினைக்கு நீங்கலாகி, நாம் இரட்சிக்கப்படலாமென ரோமர் 5:9 கூறுகிறது. இதன் அர்த்தம் என்ன?***

---

எகிப்திலிருந்து இஸ்ரவேலர் புறப்பட இருந்தனர்; அங்கிருந்த இஸ்ரவேலர் கள் தங்கள் வீட்டின் நிலைக்கதவுகளில் பூசியிருந்த இரத்தம்தான், எகிப்தின் தலைப் பிள்ளைகளுக்கு நேரிட்ட அதே ஆபத்து இஸ்ரவேலரின் தலைப்பிள்ளைகளுக்கு நேரிடாதபடிக்காப்பாற்றியது. அதுபோல, உலகத்தின் முடிவில் தேவகோபமானது பாவத்தை இறுதியாக அழிக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நீதிமான் களைப் பாதுகாக்கும்.

அன்புள்ள தேவன் கோபப்படுவது எவ்வாறு சாத்தியம் என்று சிலர் குழம்பு கிறார்கள். அவர் அன்புள்ளவர் என்பதுதான் இந்தக் கோபத்திற்கு காரணமே. உலகத்தை நேசிக்கிற தேவனால் பாவத்திற்கு எதிராக கோபங்கொள்ளாமல் இருக்க முடியுமா? அவருக்கு நம்மேல் அக்கறையில்லை என்றால்தான், இங்கு நிகழ்வதைக் குறித்து அவர் கவலையில்லாமல் இருக்கமுடியும். உலகத்தைப் பாருங்கள்; அவருடைய சிருஷ்டிப்பை பாவம் எவ்வளவாகக் கெடுத்திருக்கிறது. இத்தகைய தீமைக்கும் கெடுதலுக்கும் எதிராக தேவன் கோபப்படாமல் இருக்கமுடியுமா?

***நாம் மேன்மைபாராட்ட வேறு என்ன காரணங்கள் இருக்கின்றன? ரோமர் 5:10,11.***

கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த வாழ்க்கையைச் சுட்டிக்காட்டும்விதத்தில் ரோமர் 5:10 சொல்லப்பட்டிருப்பதாக சில வேதாகம விளக்கவுரையாளர்கள் கூறுகிறார்கள்; இயேசு இங்கு வாழ்ந்தபோது, குணத்தில் பூரண வளர்ச்சியடைந்தார்; அது நம் கணக்கில் எண்ணப்படும்படி, அவர் இப்போது அருள்புரிந்திருக்கிறார். கிறிஸ்துவின் பரிபூரண வாழ்க்கையால் இது சாத்தியமாகியிருக்கிறது. கிறிஸ்து மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்து, என்றென்றும் உயிரோடிருக்கிறார் என்கிற உண்மையையும் பவுல் வலியுறுத்துகிறார். எபி 7:25. அவர் உயிரோடிருப்பதால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

இயேசு கல்லறையிலேயே இருந்திருந்தாரானால், அவரோடு நம் எதிர்பார்ப்புகளும் அழிந்து போயிருக்கும். கிறிஸ்து நமக்காக நிறைவேற்றியவையே, ஆண்டவருக்குள் நாம் மேன்மை பாராட்டுவதற்கான காரணங்களாக இருக்கின்றன. ரோமர் 5:11. இதைச் சிந்தியுங்கள்.

## பாவத்தினால் மரணம் பிரவேசித்தது

மரணம்தான் இறுதி சத்துரு. மனித குடும்பத்தை தேவன் சிருஷ்டித்தபோது, அவர்கள் நித்தியகாலமும் வாழவேண்டும் என்பதே அவருடைய நோக்கம். மனிதர்களும்கூட மரிக்கவிரும்புவதில்லை; அப்படியே விரும்புகிற ஒரு சிலரும்கூட தனிப்பட்ட விதத்தில் அதிக பாடுகளையும் வியாகுலத்தையும் அனுபவித்திருப்பார்கள். மரணம் நம் அடிப்படை இயல்புக்கு எதிரானது. நாம் நித்திய காலம் வாழவே ஆதியில் சிருஷ்டிக்கப்பட்டோம் என்பதே அதற்குக் காரணம். மரணம் என்னவென்று அறியாமலே இருந்திருக்க வேண்டியவர்கள் நாம்.

***ரோமர் 5:12இல் பவுல் எதுபற்றிப் பேசுகிறார்? அதன் அர்த்தம் என்ன?***

மற்ற வசனங்களைவிட வேதாகம விளக்கவுரையாளர்களால் அதிகம் விவாதிக்கப்பட்ட வசனம் இது. இந்த விளக்கவுரையாளர்கள் 'பவுல் சொல்வதைவிட்டு வேறு நோக்கங்களுக்கு இந்த வசனத்தைப் பயன்படுத்த நினைப்பதே' இதற்குக் காரணமென்று எஸ்டிஏ வேதாகம விளக்கவுரையின் 6ம் தொகுதி, பக் 529இல் சொல்லப்பட்டுள்ளது. *(The SDA Bible Commentary, vol. 6, p. 529.)*

'எவ்விதத்தில் ஆதாமின் பாவம் அவன் சந்ததியாருக்கும் சென்றது? ஆதாமின் பாவத்திற்கு அவனுடைய சந்ததியாரும் ஆளாகமுடியுமா அல்லது அவர்கள் தாங்கள் செய்கிற பாவங்களால்தாம் தேவனுக்குமுன் குற்றவாளிகளாக இருக்கிறார்களா?' என்று கேள்வி எழுப்புகிறார்கள். இந்தக் கேள்விக்குப் பதிலை இந்த வசனத்திலிருந்து பெறமுயல்கிறார்கள். ஆனால் பவுல் இங்கு இந்த விஷயம் பற்றியே பேசவில்லை. அவர் முற்றிலும் வேறொரு கருத்தை வலியுறுத்த முயல்கிறார். நாம் 'எல்லாரும் பாவம்செய்தோம்' என்று தான் முன்னர் சொன்னதையே இங்கு மீண்டும் வலியுறுத்துகிறார். ரோமர் 3:23. நாம் பாவிகள் என்கிற உணர்வு இருந்தால் மட்டுமே, நமக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதை நாம் உணரமுடியும். பாவம் எவ்வளவுக்கு மோசமானது என்பதையும், ஆதாமின்மூலம் அது இவ்வுலகில் கொண்டுவந்த மோசத்தையும் வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். பிறகு, ஆதாமின் பாவத்தின்மூலம் உலகில் நுழைந்த பேரிடரைப் போக்குவதற்கு இயேசுவில் தேவன் நமக்கு அருளியிருப்பதையும் காட்டுகிறார்.

ஆனாலும், இந்த வசனத்தில் ஆதாமில் மரணம் வந்தது என்கிற பிரச்சனை மாத்திரமே சொல்லப்படுகிறது; கிறிஸ்துவில் ஜீவன் கிடைத்துள்ளது என்கிற தீர்வு சொல்லப்படவில்லை. மரணமானது ஜீவனால் விழுங்கப்பட்டது என்பதே சுவிசேஷத்தின் மகிமையான விஷயங்களில் ஒன்றாகும். இயேசு கல்லறையின் வாசல்களைக் கடந்துசென்று, அதன் கட்டுகளைத் தகர்த்தார். 'மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்' என்று அவர் சொல்கிறார். வெளி 1:18. இயேசுவிடம் திறவுகோல்கள் இருப்பதால் சத்துருவானவன் தன்னால் சிறைப்பட்டவர்களை கல்லறையிலேயே வைத்திருக்கமுடியாது.

---

மரணத்தின் நிஜத்தையும் கொடூரத்தையும் உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்? சத்துரு பலமிக்கவன்; அப்படியானால் நம்மைவிட பெரியதான, இந்த உலகத்தில் உள்ளவைகளைவிட பெரியதான ஒரு வல்லமைமேல் நாம் நம்பிக்கை வைக்க வேண்டியது ஏன் அவசியமாக இருக்கிறது?

***நியாயப்பிரமாணம்பற்றி ரோமர் 5:13,14இல் பவுல் போதிப்பது என்ன?***

'நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்குமுன்னும்' என்கிற சொற்றொடருக்கும் 'ஆதாமிலிருந்து மோசேவரைக்கும்' என்கிற சொற்றொடருக்கும் சம்பந்தமுள்ளது. சிருஷ்டிப்பு முதல் சீனாய் வரைக்கும் காலக்கட்டத்தை பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார். அதாவது, இஸ்ரவேலரின் ஒழுங்கில், சட்டத்திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டதற்கு முன்னான காலம் அது; பத்துக்கற்பனைகளும் அதில் இருந்தன.

'நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்குமுன்' என்றால், சீனாயில் இஸ்ரவேலருக்கு பல்வேறு சட்டங்கள்மூலம் தேவன் தம் நிபந்தனைகளைக் கொடுத்ததற்கு முன்னான காலமாகும். சீனாய்க்கு முன்னரும் பாவம் இருந்தது. பொய், கொலை, விபசாரம், விக்கிரகாராதனை போன்றவை அப்போது பாவமாக எண்ணப்படவில்லையா? அவை பாவமாகத்தாம் கருத்தப்பட்டன.

சீனாய்க்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட அளவே தேவ வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருந்தது; ஆனால் பாவத்திற்கு பொறுப்பேற்கும் அளவிற்கு தேவையானவற்றை அறிந்திருந்தார்கள். தேவன் நியாயமுள்ளவர்; யாரையும் அநியாயமாகத் தண்டிப்பதில்லை. சீனாய்க்கு முன்னிருந்தவர்களும் மரித்தார்கள். மரணம் எல்லாருக்குமே நேரிட்டது. பிரத்தியேகமாகக் கட்டளை எதுவும் கொடுக்கப்படாவிட்டாலும், பாவம் பாவமாகவே கருதப்பட்டது. இயற்கையில் அவர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளைப் பெற்றிருந்தார்கள்; ஆனால் அவற்றிற்குக் கீழ்ப்படியாததால் குற்றவாளிகளாகக் கருதப்பட்டார்கள். 'காணப்படாதவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால், அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.' ரோமர் 1:20.

***'நியாயப்பிரமாணத்தில்' தேவன் தம்மை முற்றிலுமாக வெளிப்படுத்தியிருப்பதற்கான காரணம் என்ன? ரோமர் 5:20,21.***

சீனாயில் கொடுக்கப்பட்ட பிரமாணங்களில் ஒழுக்கப்பிரமாணமும் இருந்தது; சீனாயிக்கு முன்னரும்கூட ஒழுக்கப்பிரமாணம் இருந்தது. ஆனால் சீனாயில்தான் முதன்முதலாக அது எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டு, பரவலாக அறிவிக்கப்பட்டதாக வேதாகமம் கூறுகிறது.

தேவனுடைய நிபந்தனைகளைக் கைக்கொள்ளும் அளவுக்கு தங்களுக்குத் திராணியில்லை என இஸ்ரவேலர் கண்டார்கள். அதாவது 'மீறுதல்' பெருகியது. தங்கள் மீறுதல்கள் பெரிதெனக் கண்டார்கள். தங்களுக்கு ஓர் இரட்சகர் அவசியமென அவர்களை உணரச்செய்வதும், தேவன் இலவசமாக அருளிய கிருபையை ஏற்றுக்கொள்ள அவர்களைத் தூண்டுவதுமே அந்த வெளிப்பாட்டின் நோக்கமாக இருந்தது. பழைய ஏற்பாட்டு விசுவாசத்திலும் கிரியைத்துவத்திற்கு இடமில்லை.

உங்கள் நாட்டின் சட்டத்திட்டங்கள் எவ்வாறு உங்களுக்கு எது சரி, எது தவறு என்பதைக் காட்டுகின்றன? மனிதர் இயற்றிய சட்டங்களே இப்படி என்றால், தேவனுடைய நித்திய கற்பனை எப்படிப்பட்டதாக இருக்கும்?

## இரண்டாம் ஆதாமாகிய இயேசு

*'ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனு டைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவரு டைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.' ரோமர் 5:18,19.*

**எது இங்கு வித்தியாசப்படுத்திக் காட்டப்படுகிறது? கிறிஸ்துவில் நமக்குள்ள நம்பிக்கை என்ன?**

---

ஆதாமிடருந்து நாம் பெற்றது மரணதண்டனை மட்டுமே. ஆனாலும் கிறிஸ்து தலையிட்டு, ஆதாம் தவறிய இடத்தில் வெற்றி பெற்று, மனிதர்களின் நிமித்தம் ஒவ்வொரு சோதனையையும் சகித்தார். ஆதாமின் மோசமான விழுகையையும், தோல்வியையும் அவர் நிவிர்த்தியாக்கினார்; நம் பதிலாளியாக, தேவனுக்கு முன் நாம் அணுகூலமான நிலையை அடையச்செய்தார். இவ்விதத்தில் இயேசு 'இரண் டாம் ஆதாமாக' இருக்கிறார்.

'ஒழுக்கத்தீர்மானம் செய்கிற சுதந்திரம் உடையவராக, தம் நடத்தைக்கு பொறுப்பேற்பவராக இரண்டாம் ஆதாம் இருந்தார். அவரைச் சுற்றிலும் நயவஞ் சகமான, மோசமான செல்வாக்குகள் காணப்பட்டன; பாவமற்ற வாழ்க்கை வாழ் வதற்கு ஆதாம் பெற்றிருந்த சாதகமான சூழ்நிலை இவருக்கு குறைவாகவே இருந் தது. பாவிகளுக்குமத்தியில் வாழ்ந்தாலும் பாவத்திற்கான ஒவ்வொரு சோதனை யையும் அவர் எதிர்த்துநின்றார்; குற்றமற்றவராகக் காணப்பட்டார். அவர் ஒரு போதும் பாவம் செய்யவில்லை.' - *EGW, 6SDABC, p 1074.*

***ரோமர் 5:15-19இல் ஆதாமின் நடத்தைகளிலிருந்து கிறிஸ்துவின் நடத்தைகள் எவ்வாறு வேறு படுத்திக் காட்டப்படுகின்றன?***

வேறுபடுத்திக் காட்டப்படும் விஷயங்களைக் கவனியுங்கள்: மரணம், ஜீவன்; கீழ்ப்படியாமை, கீழ்ப்படிதல்; ஆக்கினை, நீதிமான்களாக்கப்படுதல்; பாவம், நீதி. ஆதாம் செய்த தவறுகளை எல்லாம் இயேசு வந்து, சரிசெய்தார்!

ரோமர் 5:15-17இல் 'ஈவு', 'வரம்' ஆகிய வார்த்தைகள் ஐந்துமுறை இடம் பெற்றுள்ளன. ஐந்து முறை! நீதிமானாக்கப்படுவது நாம் சம்பாதிக்கிற ஒன்றல்ல, அது ஓர் ஈவாகக் கொடுக்கப்படுவது என்பதையே பவுல் வலியுறுத்துகிறார். இது நம்முடைய தகுதியால், நம்முடைய புண்ணியத்தால் பெறக்கூடிய ஒன்றல்ல. மற்ற ஈவுகளைபோலவே இதையும் நாம் தேடிச்சென்று, ஏற்றுக்கொள்ளவேண்டும்; விசேஷமாக இந்த ஈவை விசுவாசத்தால் நாம் உரிமைகோரவேண்டும்.

---

நீங்கள் பெற்றதிலேயே மிகச்சிறந்த பரிசு எது? அதை நீங்கள் விசேஷமாகக் கருதுவதற் கான காரணம் என்ன? அது நீங்கள் பிரயாசப்பட்டுப் பெறாமல், உங்களுக்கு ஒரு பரிசாகக் கிடைத்ததால், எவ்வாறு அதன் மதிப்பை உணருகிறீர்கள்? ஆனாலும், இயேசுவில் நாம் பெற்றிருக்கிற ஈவுக்கு அது கொஞ்சமேனும் ஈடாகுமா?

"தங்கள் இருதயங்களின் நிலையறியாமல் அநேகர் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். எல்லாவற்றையும்விட சுபாவ இருதயமே வஞ்சனையுள்ளது என்றும், மிகவும் மோசமானது என்றும் அவர்கள் உணர்வதில்லை. அவர்கள் தங்கள் சுயநீதியைப் போர்த்திக் கொள்கிறார்கள்; தாங்கள் வைத்துள்ள குண அளவை எட்டுவதில் திருப்தியடைகிறார்கள்" – *EGW, 1SM, p. 320*.

"ஒரே நம்பிக்கையும் இரட்சிப்பும் கிறிஸ்துவே என்று பிரசங்கிப்பது மிகப்பெரிய தேவையாகும். விசுவாசத்தால் நீதிமானாவதுபற்றி போதிக்கப்பட்டது, தாகத்தால் களைத்த பயணிக்கு தண்ணீர் கிடைத்ததுபோல இருந்தது. நம்மிடமுள்ள எந்தப் புண்ணியத்தாலும் அல்ல, தேவனிடமிருந்து வரும் ஓர் இலவச ஈவாக கிறிஸ்துவின் நீதி நமக்கு அருளப்படுகிறது என்கிற கருத்து அருமையானது." – *p. 360*.

"பின்பு வந்தவருக்கு அடையாளமாக இருந்தது யார்? ரோமர் 5:14. ஆதாம் எவ்வாறு கிறிஸ்துவுக்கு ஓர் அடையாளமாக இருக்கிறார்? ஆதாமின் சந்ததியார் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்திராவிட்டாலும், அவர்கள் மரிப்பதற்கு ஆதாம் காரணமானதுபோல, அவர்கள் எந்த நீதியையும் சம்பாதிக்காவிட்டாலும் தம் பிள்ளைகள் நீதியைப் பெறுவதற்கு கிறிஸ்து காரணமானார்; ஏனெனில் சிலுவையின் மூலம் சகல மனிதருக்காகவும் அவர் நீதியைச் சம்பாதித்தார். ஆதாமுடைய மீறுதலின் அடையாளம் நமக்குள் இருக்கிறது, எனவே அவரைப்போல நாமும் பாவம்செய்தவர்களாக மரிக்கிறோம். கிறிஸ்துவின் அடையாளம் நமக்குள் இருக்கிறது, எனவே, அவரைப்போல சகல நீதியையும் நிறைவேற்றினவர்களாக நாம் பிழைக்கிறோம்." – *Martin Luther, Commentary on Romans, pp. 96, 97.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. 'தேவனுடைய வார்த்தையை ஆழமாக ஆராயவேண்டும்; முன்பைவிட அதிகமாக தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்களைப் படிக்க வேண்டும். ரோமவல்லமையையும் போப்புமார்க்கத்தையும்பற்றி நாம் அதிகம் பேசவேண்டியதில்லை; ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் என்ன எழுதியிருக்கிறார்களென ஆராயவேண்டும்.' *Ev, p 577.* இதில் எலன் ஒய்ட் சொல்வது என்ன?
2. வாழ்க்கையின் அர்த்தத்தை அழிப்பதாக மரணம் இருக்கிறது. இறுதியில் ஒரேயடியாக நாம் இல்லாமல்போவதால், வாழ்வதில்தான் என்ன பயன் இருக்கிறதென பல எழுத்தாளர்களும் தத்துவஞானிகளும் புலம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன பதில்சொல்லலாம்? அந்த அர்த்தமற்ற நிலைக்கு கிறிஸ்துவிலுள்ள நம்பிக்கையே எவ்வாறு பதிலாக இருக்கமுடியும்?
3. ஆதாமின் விழுகையால் பாவ இயல்பைத் தரித்தோம்; கிறிஸ்துவின் வெற்றியால் நித்திய வாழ்வுபற்றிய வாக்குறுதியை விசுவாசத்தால் சொந்தமாக்குகிறோம். இதை உரிமைகோராதபடி நம்மில் சிலரைத் தடுப்பது எது?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

**Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*